Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 1, 2022

புதன்கிழமை ஜூன் 01, 2022 | ஒளி: 08 கதிர் 011 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# துமிந்தவை கைது செய்

- அதிரடி தீர்ப்பை அறிவித்தது உயர்நீதிமன்றம்
- ஜனாதிபதி வழங்கிய மன்னிப்புக்கு இடைக்கால தடை
- கடவுச்சீட்டை தடுத்துநிறுத்த கட்டளை
- சி.ஐ.டியினர் அதிரடியாக வலையை விரித்தனர்



மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவருமான துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ வழங்கிய பொது மன்னிப்பின்செயற்பாட்டை இடைநிறுத்தி அதற்கு இடைக்கால தடை உத்தரவை உயர்நீதிமன்றம், நேற்று (31) பிறப்பித்தது.

துமிந்த சில்வாவை உடனடியாக கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், அவருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்ததுடன், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் கட்டளையிட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் அவரது தாயார் சுமனா பிரேமச்சந்திர உள்ளிட்ட மூவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை பரிசீலித்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர்களான அச்சலா வெங்கப்புலி, பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், மனு மீதான பரிசீலனை செப்டெம்பர் 09ஆம் திகதி இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனுவில், துமிந்த சில்வா, நீதி அமைச்சர் அலி சப்ரி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ், சங்கத்தின் செயலாளர் ரஜீவ் அமரசூரிய மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வரி மறுசீரமைப்பு விபரம்

மகேஸ்வரி விஜயனந்தன்

- உள்நாட்டு இறைவரிச் சட்டம்
- பெறுமதி சேர் வரி (வற்) சட்டம்
- தொலைத் தொடர்பு வரிச் சட்டம்
- பந்தயம் மற்றும் விளையாட்டு வரிச்சட்டம்
- நிதி முகாமைத்துவச் சட்டம்
- தனிநபர் வருமான வரி எல்லை ரூ.3 மில். இருந்து ரூ.1.8 மில். குறையும்
- 8% இருந்த பெறுமதி சேர் வரி (வற்) 12 %மாக அதிகரிப்பு
- தொலைத் தொடர்பு வரி 11.25% லிருந்து 15 %மாக அதிகரிப்பு
- பன்னாட்டு வருமான வரி 24% இருந்து 30 %மாக அதிகரிப்பு
- சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ.1.5 மில்.வட்டி வருமானம் மீதான நிவாரணம் மீண்டும் அறிமுகம்
- மொத்த வருமானம் மீதான தீர்வை 10 %தில் இருந்து 15 %மாக உயர்த்துதல்



மோசமான காலநிலை

## 10 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

பா.நிரோஸ்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பெய்துவரும் கன மழை காரணமாக பத்து மாவட்டங்களுக்கு மண்சரிவு, கனமழை குறித்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஒரு சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கு அதிகளவான மழை வீழ்ச்சி இன்று (01) பதிவாகலாமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## பரீட்சார்த்தியிடம் சில்மிஷம் விசாரணைக்கு பணிப்பு

க.பொ.த சாதாரண தர மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை குறித்து உடனடி விசாரணைகளை முன்னெடுத்து விரிவான அறிக்கை சமர்பிக்குமாறு, கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என கல்வியமைச்சு, நேற்று (31) அறிவித்தது.

அநுராதபுரம், நாச்சதுவ பகுதியில் க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதவந்த மாணவியொருவரை பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே விசாரணை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வினாத்தாளுக்கு பதிலளிக்க உதவுவதாகக் கூறி, ஹிந்தோகம பாடசாலை பரீட்சை நிலையத்தின் கண்காணிப்பாளர், பெண் பரீட்சார்த்தி ஒருவரை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக செய்தி வெளியாகியிருந்தது.

தொடர்ச்சி P2

## இரவுநேர மின் வெட்டு மீண்டும் அமலாகிறது

### இவ்வாரம் மின்வெட்டு நேரம் குறைப்பு



நாளை வியாழக்கிழமை (02) மற்றும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (03) ஆகிய தினங்களில் 2 மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்படும் என்றும் சனிக்கிழமை (04) 1 மணி நேரமும் ஞாயிற்றுக்கிழமை மின் வெட்டு அமல்படுத்தப்படாது எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நேற்று (31) அறிவித்தது.

தற்போதைய குறைந்த மின் நுகர்வு மற்றும் நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதன் காரணமாக மின் வெட்டு நேரம் குறைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள், நீர் தட்டுப்பாடு,

தொடர்ச்சி P2



இராணுவத்தளபதியாக

## இன்று பதவியேற்கிறார் விக்கும் லியனகே

### ஜெனரல் சவேந்திர சில்வாவும் பாதுகாப்பு படைகளின் பிரதானியாகின்றார்



இன்று முதல் அமுலாகும் வகையில் பாதுகாப்பு படைகளின் பிரதானியாக ஜெனரல் சவேந்திர சில்வா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ள அதே வேளையில், மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே இலங்கையின் புதிய இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் இன்று தனது கடமைகளை அவர் பொறுப்பேற்றவுள்ளதாக இலங்கை இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2





## 695 பில். ரூபாய்க்கு குறைநிரப்பி

மகேஸ்வரி விஜயனந்தன்

சமுர்த்திப் பயனாளிகள், பெருந்தோட்ட மக்கள், ஒய்வூதியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்தால் சலுகைப் பொதி ஒன்று அறிமுகம் செய்யப்பட்ட நிலையில் அதற்கான செலவுகளை மேற்கொள்வதற்கும், அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் 695 பில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் குறைநிரப்பு மதிப்பீடொன்றை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கச்சத்தீவு விவகாரத்தில்

## ஸ்டாலினின் கருத்து இந்திய அரசின் கருத்தல்ல

மகேஸ்வரி விஜயனந்தன்

அண்மையில் இந்திய பிரதமர் மோடி கலந்துகொண்ட நிகழ்வொன்றில் கச்சத்தீவை இந்தியா மீண்டும் பெற வேண்டும் என உரையாற்றிய தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தனது தனிப்பட்ட கருத்தையே முன்வைத்ததாக தெரிவித்த ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன, தமிழக முதல்வரின் கருத்தை இந்திய அரசின் கருத்தாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (31) நடைபெற்ற அமைச்சரவை

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு ஒத்துழைக்க பிரித்தானிய இணக்கம்

பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி கலந்துரையாடலில் ஈடுபட்டதாகவும், இதன்போது இலங்கையின் நிலைமைகள் குறித்து தெளிவுபடுத்தியுள்ளதாகவும் ரணில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது மற்றும் ஏற்றுமதி சார்ந்த திறந்த பொருளாதாரமாக இலங்கை மாறுவதற்கு உதவுவது போன்ற விடயங்களில் தமது ஒத்துழைப்புகள் இருக்குமென பிரித்தானிய பிரதமர் உறுதியளித்துள்ளதாக ரணில் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இராஜதந்திர கடவுச்சீட்டு விவகாரம்

## 4 நாட்கள் சிறை வாசத்தின் பின்னர் ஷஷிக்கு பிணை





இரண்டு வருட கடூழிய சிறைதண்டனை விதிக்கப்பட்டு 4 நாட்கள் சிறை வாசம் அனுபவித்த, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவியான ஷஷி வீரவன்சவை கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, நேற்று (31) பிணையில் விடுதலை செய்தார்.

50,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவர், நாட்டை விட்டு வெளியேற தடை விதித்ததுடன், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகவேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு போலியான தகவல்கள் வழங்கி, இராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட அவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை (27) சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

ஷஷி வீரவன்சவுக்கு இரண்டு வருட கடூழிய சிறைதண்டனையும் சிறைதண்டனைக்கு மேலதிகமாக, 100,000 ரூபாய் அபராதமும், செலுத்த தவறினால் ஆறு மாத சிறைதண்டனையும் விதித்து கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீ ராகல கடந்த 27ஆம் திகதி தீர்ப்பளித்தார்.

தொடர்ச்சி P2

## தேர்தலுக்கு செல்வதே ஒரே வழி

பா.நிரோஸ்



பொருளாதார, அரசியல் மறுசீரமைப்பை செய்யாதவரையில் நாட்டுக்கு ஐ.எம்.எப் உதவி கிடைக்கப்போவதில்லை. தேர்தல் ஒன்றின் ஊடாக அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் மாத்திரமே அந்த அரசாங்கத்துக்கு சட்ட அங்கீகாரமும், உலக நாடுகளின் அங்கீகாரமும் கிடைக்கும் எனவும், நாட்டின் பிரச்சினையை தீர்க்க தேர்தல் ஒன்றே தீர்வு என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (31) நடைபெற்ற ஊடகவியலாளர்

தொடர்ச்சி P2

## 21/4 தாக்குதல்

### 4 பேருக்கு பிணை

கனகராசா சரவணன்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்டவர்களில் நால்வருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 51 பேரையும் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று ( 31) உத்தரவிட்டார்

சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தது தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனையில் நால்வர் பிணையில் விடுதலைச் செய்யப்பட்டனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## பரீட்சார்த்தியிடம் சில்மிஷம் விசாரணைக்கு பணிப்பு

அதற்கமைய, பின்வரும் நடவடிக்கைகளின் அடிப்படையில் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவியின் வாக்குமூலம், மேற்பார்வையாளர் மற்றும் உதவியாளரின் வாக்குமூலம், குற்றம் சாட்டப்பட்ட கண்காணிப்பாளரின் வாக்குமூலம், ஹிந்தோகம பரீட்சை நிலையத்தில் அப்போது பரீட்சை மண்டபத்தில் இருந்த ஏனைய பரீட்சார்த்திகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றைப் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து துறை சார்ந்த விசாரணை நடத்தி, குற்றவாளிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறியதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. குறித்த மாணவியின் பெற்றோரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய கைது செய்யப்பட்டு அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட குறித்த மேற்பார்வையாளர், நாளை (02) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


## இரவுநேர மின் வெட்டு மீண்டும் அமலாகிறது

மின்பிறப்பாகிகள் பிரச்சினை உள்ளிட்டவற்றின் விளைவாக போதிய உற்பத்தியின்மை காரணமாக மின்வெட்டை அமல்படுத்த வேண்டியுள்ளதாகவும் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் இரவு நேர மின்வெட்டு மீண்டும் அமல்படுத்தப்படும் எனவும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. ஏற்கெனவே 3 மணி நேரங்களுக்கு மேல் மின்தடை அமல்படுத்தப்பட்டிருந்த நிலையில் வார நாட்களில் மின் வெட்டு நேரம் 1 மணித்தியாலத்தால் குறைக்கப்பட்டுள்ளதுடன், வார இறுதி நாட்களில் ஞாயிறன்று மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது. க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக கடந்த மே 22ஆம் திகதி முதல் இன்று (01) வரையான காலப்பகுதிக்குள், மாலை 6.30க்கு பின்னர் மின் துண்டிக்கப்பட்டிருக்க வில்லை என்பதுடன், ஞாயிற்றுக்கிழமை மற்றும் குறிப்பிட்ட சில தினங்களிலும் மின் வெட்டு அமுலாகவில்லை. தற்போது வியாழன் முதல் சனி வரையான மூன்று தினங்களுக்குமான மின் வெட்டு அட்டவணையை சபை வெளியிட்டுள்ளது. அதற்கமைய ஏ முதல் டபிள்யூ வரையான 20 வலயங்களில் வியாழன், வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரையான காலப்பகுதியில் 1 மணி நேரமும் மாலை 6 மணிமுதல் 10 மணி வரையான காலப்பகுதிக்குள் 1 மணி நேரமும் என 2 மணி நேர மின்வெட்டு அமுலாகவுள்ளது.

## இன்று பதவியேற்கிறார் விக்கும் லியனகே

பாதுகாப்புப் படைகளின் பதில் பிரதானி, ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று (31) முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நியமனக் கடிதம் கையளிக்கப்பட்டது. இராணுவத் தளபதியாகவும், பாதுகாப்புப் படைகளின் பதில் பிரதானியாகவும் செயற்பட்ட சவேந்திர சில்வா நேற்று (31) இராணுவத் தளபதி பதவியிலிருந்து இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, பாதுகாப்புப் பதவி நிலை தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.







# துமிந்தவை கைது செய்

துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு செல்லுபடியற்றது அல்லது சட்டத்தில் எந்த பலமும் அல்லது பயனும் அற்றது என்றும் உயர் நீதிமன்றம் அதற்கு தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனவும் மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவரது கடவுச்சீட்டை முடக்கி வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள துமிந்தவுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான தீர்மானம் எதேச்சதிகாரமானது எனவும் சட்ட அடிப்படை அற்றது எனவும் மனுதாரர்கள் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர். 2011ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போது பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட முன்னாள் எம்.பியான துமிந்த சில்வா உட்பட 5 பேருக்கு 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் 8ஆம் திகதியன்று கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை தீர்ப்பளித்தது. மரண தண்டனை தீர்ப்புக்கு எதிராக துமிந்தவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 11ஆம் திகதியன்று உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2021 ஜூன் 24ஆம் திகதியன்று துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியிருந்தார். இது, பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் குடும்பத்தினர், எதிர்க்கட்சி, சட்ட சமூகம் மற்றும் சர்வதேச நாடுகளின் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்த மாதம் ஆரம்பத்தில் துமிந்த சில்வா இருந்தார். அவர் நாட்டை விட்டு வெளியேறியதாக பல செய்திகள் கூறப்பட்டன. எனினும் அவர் திரும்பி வந்தாரா இல்லையா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

## 695 பில். ரூபாய்க்கு குறைநிரப்பி

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று (31) அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலவுகின்ற நெருக்கடியான பொருளாதார சூழல் காரணமாக பொதுமக்கள் முகங்கொடுக்க நேரிட்டுள்ள அழுத்தங்களை இயலுமான வரையில் குறைப்பதற்காக சமுர்த்திப் பயனாளிகள், பெருந்தோட்ட மக்கள், ஓய்வூதியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கத்தால் சலுகைப் பொதி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கான செலவுகளை மேற்கொள்வதற்கும், அத்தியாவசிய அரச சேவைகளைத் தடைகளின்றி தொடர்ச்சியாக மேற்கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காகவும் குறைநிரப்பு மதிப்பீடொன்றை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 695 பில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் 'வரவு செலவுத்திட்ட சலுகைச் சேவைகள் மற்றும் திடீர் தேவைகளின் பொறுப்பு' கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்குவதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டை சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 10 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

இதன்படி மேல், சப்ரகமுவ, வடமேல் ஆகிய மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இவ்வாறு மழை வீழ்ச்சிப் பதிவாகலாமெனவும், அநுராதபுர மாவட்டத்திலும் மழை பெய்யலாமெனவும் எதிர்வுக்கூறப்பட்டுள்ளது. மத்திய மலைநாடு, வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்கள், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் 40 - 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாமெனவும்,பலத்த காற்றினால் ஏற்படும் சேதங்கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, கேகாலை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுர, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு கடும் மழை தொடர்பான சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு எச்சரிக்கை

மேலும் , நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெய்துவரும் கனமழை காரணமாக 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காலி, கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீர்மட்டங்கள் உயர்ந்தன

அத்துடன், நீர்நிலைகளை சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. நாட்டில் பெய்துவரும் கடும் மழை காரணமாக களு, கிங், நில்வலா ஆகிய கங்கைளிலும், அத்தனகளு ஓயாவின் நீர் மட்டங்களும் நிரம்பியுள்ளதால், இந்த நீர்நிலைகளுக்கு அருகில் வசிப்பவர்கள் வெள்ளப்பெருக்கு அபாயம் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஸ்டாலினின் கருத்து இந்திய அரசின் கருத்தல்ல

முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

எந்தவொரு நாட்டிலும் அந்தந்த பிரதேசங்களுக்கு பொறுப்பான தலைவர்கள் பல்வேறு அரசியல் கருத்துக்களை கொண்டிருப்பர். எமது நாட்டில் வடக்கில் முன்னாள் முதலமைச்சராக சி.வி.விக்கினேஸ்வரன் பதவி வகித்த போது, பல்வேறு கருத்துகளை உலக நாடுகளிடம் முன்வைத்தார். அவரது அந்த கருத்துகள் அந்த நாட்டு அரசின் கருத்தாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது தனது நிலைப்பாடு என்றார். எனவே கச்சத்தீ தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்த போது, இந்தியப் பிரதமர் மோடி எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை என்றார்.

## இலங்கைக்கு ஒத்துழைக்க பிரித்தானிய இணக்கம்

இந்த கலந்துரையாடல் குறித்து அறிக்கை ஒன்றினை விடுத்துள்ள பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளதானது, வலுசக்தி துறை சார்ந்த வேலைத்திட்டங்களில் தொடர்ந்தும் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், அதேபோல் ஏற்றுமதியை முதன்மைப்படுத்திய பொருளாதார வேலைத்திட்டங்களில் இலங்கைக்கு தமது ஒத்துழைப்புக்களை வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

## 4 நாட்கள் சிறை வாசத்தின் பின்னர் ஷஷிக்கு பிணை

அதனையடுத்து அன்றையதினம் மாலை தனது சட்டத்தரணிகளூடாக மேற்குறித்த மேன்முறையீட்டு மனுவை ஷஷி தாக்கல் செய்திருந்த நிலையில், நேற்று (31) வரை மனு மீதான பரிசீலனை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. நேற்றையதினம் (31) மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றத்தின் தீவிரத்தை கருத்தில் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவரை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று ஷஷி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷவீந்திர பெர்னாண்டோ மன்றில் கோரிநின்றார். சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், பிணை மனுவுக்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்பதுடன் மன்றின் விருப்ப அதிகாரத்தை பிரயோகிக்குமாறு கோரியதையடுத்தே பிணை வழங்கப்பட்டது. மேன்முறையீட்டு மனு மீதான பரிசீலனையை திங்கட்கிழமை வரை (30) ஒத்திவைத்து கடந்த 27ஆம் திகதியன்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. மனு தொடர்பில் சட்டமா அதிபருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும் என்றும் இதன்படி, ஆலோசனைக்காக அனுப்பப்படும் மனுவை மே 31ஆம் திகதியன்று மீள அனுப்புமாறு சட்டமா அதிபருக்கு பிரதான நீதவான் நோட்டீஸ் பிறப்பித்துடன், நேற்றையதினம் (31) மனு மீதான பரிசீலனை இடம்பெறும் எனவும் நீதவான் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்கு செல்வதே ஒரே வழி

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை நாம் முன்கூட்டியே கூறியிருந்தோம். எனினும் அரசாங்கம் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது நாட்டில் டொலரும் இல்லை, ரூபாயுமில்லை. ஆனாலும் நாட்டுக்கு டொலர் வருமென அரசாங்கம் கனவு காண்கிறதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு பொருளாதார நிவாரணங்களை வழங்குவது தொடர்பில் இதுவரையில் கலந்துரையாடல்களைக்கூட மேற்கொள்ளவில்லை என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து ஜனாதிபதி கடந்த காலங்களில் பல நிவாரணங்களை பெற்றுக்கொண்டுள்ளார். இவை அனைத்தும் சில்லறை நிவாரணங்களே. நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான நிவாரணங்கள் இதுவரையில் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை மீள் சீரமைப்பு செய்ய வேண்டும், நாட்டின் வருமானத்தை விட செலவு மூன்று மடங்காக இருக்கிறது எனவே இதனை எவ்வாறு குறைப்பது என்கிற யோசனைகளை முன்வைக்க வேண்டுமென இரு பிரதான காரணங்களை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகின்றன எனவும் தெரிவித்தார்.

பொருளாதார, அரசியல் மறுசீரமைப்பை நாட்டுக்குள் செய்யாதவரையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நிவாரணங்களை உலக நாடுகள் வழங்கப்போவதில்லை. சர்வதேசம் மட்டுமல்லாது நாட்டு மக்களும் அரசியல் மறுசீரமைப்பையே கோருகிறார்கள் எனவும் தெரிவித்தார். சில்லறைத்தனமான நிவாரணங்களை வெளிநாடுகள் வழங்கினாலும், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான நிவாரணத்தை சர்வதேச நாணய நிதியத்தாலேயே வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.







அம்பகஹபெலஸ்ஸவில்

# புதிய கோபுரத்தை நிறுவுகிறது டயலொக்

## 2021 இல் 1028 கிராமங்கள் மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கான இணைப்பை மேம்படுத்துகிறது

இலங்கை முழுவதிலும் உள்ள கிராமப்புற சமூகங்களுடனான தொடர்பை விரிவுபடுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டிற்கு அமைய இலங்கையின் பரந்த வலையமைப்பான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, நாற்திசையும் டயலொக் முயற்சியின் கீழ், கண்டி அம்பகஹபெலஸ்ஸ கிராமத்தில் ஒரு கோபுரத்தை அண்மையில் நிறுவியது.

அம்பகஹபெலஸ்ஸ பிரதேசத்திலுள்ள சமூகங்களின் கல்வி மற்றும் வேலை அபிலாஷைகளை மேம்படுத்துவதில் நம்பகமான இணைப்புக்கான அணுகலை வழங்குவதற்காக இந்த வலையமைப்பு தளம் நிறுவப்பட்டது. 2021 இல் 'நாற்திசையும் டயலொக்' செயல்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இலங்கையின் முd;dzp இணைப்பு வழங்குdர், நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தொடர்பாடல் சேவையை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான தனது முயற்சிகளின் ஒரு பகுதியாக 1028 கிராமங்கள் மற்றும் தொலைதூர கிராமப்புற சமூகங்களுக்கான இணைப்பை மேம்படுத்தியுள்ளது. கண்டி மாவட்டத்தில் அம்பகஹபெலஸ்ஸ கோபுரத்துடன் சேர்த்து உல்பத்கமவிலும் தொடர்பாடல் கோபுரம் நிறுவப்பட்டது. மேலும், மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல, புலனவெவ மற்றும் கனிமயாய ஆகிய இடங்களிலும் களுத்துறை மாவட்டத்தில் மொரப்பிட்டிய, அத்வெல்தொட்ட, வலகெதர மற்றும் கித்துல்கொட ஆகிய பிரதேசங்களிலும் புதிய சேவை கோபிரங்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த நெருக்கடியான காலங்களில் தொலைத்தொடர்பு வசதியை விரிவுபடுத்துவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்குமான தனது தொடர் முயற்சிகளின் அங்கமாக, டயலொக் 3,000 க்கும் மேற்பட்ட தளங்களை தரமுயர்த்தியுள்ளதுடன் 453 புதிய டவர்களை 2021 இல் உருவாக்கியது, அதன் நெட்வொர்க்கில் தற்போது 4,380 மொபைல் 4G தளங்கள் காணப்படுகிறது, இது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கோபுரங்களின் அதிகூடிய எண்ணிக்கையாகும். டயலொக் கிரீன் ஃபீல்ட் கோபுரங்களில் தனது சேவைக் கிடைப்பதை விரைவாக விரிவடையச் செய்துஇ தொலைதூர கிராமப்புற சமூகங்களைச் சென்றடையவும், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் அவசரத் திறன் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் Lamp Pole தீர்வுபாயங்களை பயன்படுத்தவும் செய்தது. 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 95% க்கும் அதிகமான மக்கள் தொகையை இலக்காகக் கொண்டு டயலொக் தொடர்ந்து இலங்கை முழுவதும் கவரேஜை மேம்படுத்தும்.



கடந்த 20 மாதங்களில்

# ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன

கடந்த 20 மாதங்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய்கள் நாட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும், 2019 ஆம் ஆண்டில் 600 கோடி ரூபாய்கள் அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நாட்டின் தேசிய பொருளாதார நெருக்கடிக்கு இதுவே பிரதான காரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒரு டிரில்லியன் ரூபாய்கள் அச்சடிக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானமானது இலங்கையை படுகுழியில் தள்ளப்போகின்றது எனவும், நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியாளர்களே காரணமாகும். அதில் பிரதான பங்கு ரணில் விக்கிரமசிங்கவையும், நிகழ்கால நெருக்கடிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவையும் சாரும் எனவும் தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளில் ஐந்து நிதி அமைச்சர்களை மாற்றியுள்ள போதிலும் பொருளாதார பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை கண்டறியவில்லை.



அமைச்சரவை இருக்கின்றதா இல்லையா என தெரியவில்லை. இவ்வாறு தலைகளை மாற்றி தீர்வு காண முடியாது எனக்கூறிய அவர், ஒட்டுமொத்தமாக அரச பொறிமுறை மாற்றப்பட்டால் மட்டுமே இதற்கான தீர்வை காண முடியும் எனவும் கூறினார்.

1950 களில் ஒரு பில்லியன் ரூபாயாக இருந்த இலங்கையின் கடன் தொகையானது இன்று 17.8 டிரில்லியன் ரூபாயாக உயர்வடைந்துள்ளது. 2012 ஆண்டில் இருந்து மத்திய அரசாங்கத்தின் கடன் வேறாகவும் நிறுவனக் கடன்கள் வேறாகவும் பிரித்து காட்டினர். ஆனால் ஒட்டுமொத்தமாக நாட்டின் கடன் தொகையானது 21 டிரில்லியன் ரூபாயாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வருமானமானது வீழ்ச்சி கண்டுள்ளது, கடந்த 2021 ஆண்டில் அரசாங்கத்தின் வருமானமானது வெறும் 8 வீதமாகவே உள்ளது. நாளொன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய்கள் செலவு என்ற ரீதியில் சென்றுகொண்டுள்ளது. தற்போதுள்ள கடன் நெருக்கடியில் இருந்து தற்காலிகமாக விடுபட கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு கட்டிடம், பிரதான தபால் நிலையம் உள்ளிட்ட முக்கிய ஆறு கட்டிடங்களையும் அதனுடன் இணைந்த காணியையும் விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவையில் ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

2022 – 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக

# 9.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்க உலக நிதியம் இணக்கம்

உலக நிதியம் 2022 - 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக 9.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த வழங்கலை பெற்றுக் கொள்வதற்காக அவ் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக சுகாதார அமைச்சர் கடந்த அமைச்சரவைக்கு தெளிவூட்டியதுடன், அமைச்சரவையில் அதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையாக தோன்றியுள்ள எயிட்ஸ், காசநோய் மற்றம் மலேரியா போன்ற தொற்றல்லா நோய்களை ஒழிக்கும் நோக்கில் 2002 ஆம் ஆண்டில் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவுடன் போராடுவதற்கான உலக நிதியம் தாபிக்கப்பட்டுள்ள நிலையில் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் அந்நிதியத்தின் மூலம் இலங்கைக்கு 114 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக 24 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் சுகாதார அமைச்சுடன் 15 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இலங்கை தேசிய சர்வோதய சங்கம், வெப்பமண்டல சுற்றாடல்சார் நோய்கள் மற்றும் சுகாதாரம் சார்ந்த தனியார் கம்பனி மற்றும் இலங்கை குடும்பத் திட்டமிடல் சங்கம் ஆகிய நிறுவனங்கள் ஏனைய ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளன. சுகாதார அமைச்சு 88.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன், அவற்றில் 2021 ஒக்ரோபர் 31 ஆம் திகதியாகும் போது 71 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கல்களை பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நம்பிக்கையுடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள்

மகேஸ்வரி விஜயனந்தன்

இலங்கை மாத்திரமல்ல முழு உலகமும் இன்று உணவு நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளதாக தெரிவித்த விவசாயத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான மஹிந்த அமரவீர, குறைந்தது இந்த மாதம் 10ஆம் திகதியாவது தமது உற்பத்தி நிலங்களுக்குச் சென்று, நாட்டுக்கு உணவளிக்கும் செயற்பாடுகளில் பங்களிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (31) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

உணவு நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்காக எமது நாடு தயார்ப்படுத்தலை முன்னெடுப்பது



தொடர்பில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருவதாக தெரிவித்த அவர், இந்த நாட்டிலுள்ள சகலரும் இந்த நிலையை சரியாக புரிந்துகொண்டால் இந்த சவாலுக்கு முகம் கொடுக்கும் தைரியம் கிடைக்கும் என்றார்.

கரிம உரங்களுக்கு விவசாயிகளிடம் நல்ல கேள்வி இருப்பதாகத் தெரிவித்த அவர், அது தொடர்பில் பிரதமரும் ஜனாதிபதியும் பல நாடுகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.எமது நாட்டுக்கு உர ஏற்றுமதி செய்த பல நாடுகள் அதனை இடைநிறுத்தியுள்ளதென்றும் மீண்டும் எமது நாட்டுக்கு உரத்தை ஏற்றுமதி செய்யுமாறு கோரி, தற்போது 7 நாடுகளின் தூதுவர்களுக்கு தான் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளேன் என்றார்.

இதற்கமைய, இந்தியாவிடமிருந்து 65,000 மெட்றிக் தொன் உரத்தை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதெனவும் இந்த விடயம் தொடர்பில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட அக்கறையுடன் செயற்படுகிறார் என்றார். எனவே உரம் கிடைக்கும் வரையில் வயலுக்குச் செல்லாமல் இருப்பதை விடுத்து, உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தமது உற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.


## அறிவித்தல்

### டெல் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சி – PQ 183
### மேலதிக பொதுக் கூட்டம்

கீழ்க்காணும் இந்த அறிவித்தலின் பிரகாரம் டெல் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சியின் (கம்பனி) மேலதிக பொதுக் கூட்டம் (**"EGM"**) **2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.45** மணிக்கு நிகர்நிலைத் தளத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டம் தொடர்பாக 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் முறைப்படி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி.

பொதுக் கூட்டம் தொடர்பான விவரங்கள் நிகழ்ச்சி நிரல் அத்துடன் பதிலாளுக்கானதும் மற்றும் பதிவு செய்வதற்கானதுமான படிவத்தை (**https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=TAJ.N0000** ) என்ற கொழும்பு பங்குச் சந்தையின் இணையத் தளத்தில் அல்லது கம்பனி இணையத் தளத்தில் (**https://www.tajhotels.com/en-in/taj/tajsamudra-colombo/** ) பெற்றுக்கொள்ள முடியும்.

கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள், தயவுசெய்து தாமதமின்றி, மேற்குறித்த இணையத்தளங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கோ அல்லது **deepa.perera@tajhotels.com** அல்லது **corporateservices@corporateservices.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டம் ஆரம்பமாகும் குறித்த நேரத்துக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**டெல் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சியின் இயக்குநர் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம்**
கோர்ப்பிரேட் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்
**2022 ஜூன் மாதம் 01 ஆம் திகதியின் படி**

## அறிவித்தல்

### டெல் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சி – PQ 183
### 42 வது வருடாந்த பொதுக் கூட்டம்

கீழ்க்காணும் இந்த அறிவித்தலின் பிரகாரம் டெல் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சியின் (கம்பனி) நாற்பத்தி இரண்டாவது 42 வது வருடாந்த பொதுக் கூட்டம் (**"AGM"**) **2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு** நிகர்நிலைத் தளத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டம் தொடர்பாக **2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி** நடைபெற்ற கூட்டத்தில் முறைப்படி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி.

பொதுக் கூட்டம் தொடர்பான விவரங்கள் நிகழ்ச்சி நிரல் அத்துடன் பதிலாளுக்கானதும் மற்றும் பதிவு செய்வதற்கானதுமான படிவத்தை (**https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=TAJ.N0000**) என்ற கொழும்பு பங்குச் சந்தையின் இணையத் தளத்தில் அல்லது கம்பனி இணையத் தளத்தில் (**https://www.tajhotels.com/en-in/taj/tajsamudra-colombo/** ) பெற்றுக்கொள்ள முடியும்.

கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள், தயவுசெய்து தாமதமின்றி, மேற்குறித்த இணையத்தளங்களில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கோ அல்லது **deepa.perera@tajhotels.com** அல்லது **corporateservices@corporateservices.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கூட்டம் ஆரம்பமாகும் குறித்த நேரத்துக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னராக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**டெல் லங்கா ஹோட்டல்ஸ் பி.எல்.சியின் இயக்குநர் சபையின் அறிவுறுத்தலின் பிரகாரம்**
கோர்ப்பிரேட் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்
**2022 ஜூன் மாதம் 01 ஆம் திகதியின் படி**


# ரணிலும் ஓடி ஒழியும் நிலை ஏற்படும்



பா.நிரோஸ்

மத்திய வங்கியில் நிதி இருப்பதாகவும் இதனால் பிரச்சினைகள் இல்லை எனவும் ரணில் கூறுவதாக தெரிவிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, மஹிந்த ஓடியொழிந்ததை விட பெரிய இடம்மொன்றில் ரணிலும் ஓடியொழிய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்,

குழுக்களை அமைத்து காலத்தைக் கடுத்துவதே பிரதமர் ரணிலின் வழக்கமான செயல். தற்போதும் அதனையே செய்துகொண்டிருக்கிறார். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கான போட்டியால் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் நெருக்கடி நிலைமைகளை மக்கள் அனுபவிக்கிறார்கள். நாமல் எம்.பியின் எதிர்கால கனவை நிறைவேற்றுவதற்கான வேலைகளையே ரணில் செய்கிறார். இதனை விடுத்து பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்துள்ள நாட்டை ரணிலால் காப்பாற்ற முடியாது எனவும் தெரிவித்தார்.

மே 9ஆம் திகதிக்குப் பின்னர் ராஜபக்ஷர்களுக்கு பயம் ஏற்பட்டிருந்தது எனினும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று அந்த பயத்தை போக்கியுள்ளார். "கோட்டா கோ கம" தற்போது ஸ்டேகோட்ட என மாறியுள்ளது. உண்மையில் நாட்டு மக்கள் பாவம். ராஜபக்ஷர்களே நாட்டில் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கான வரிசைகளை உருவாக்கியதோடு, நாட்டையும் நாசமாக்கியதாகவும் தெரிவித்தார்.











## சட்ட ஆட்சி இலங்கையில் இல்லையென வடக்கு கிழக்கில்

# பெண்கள் கொந்தளிப்பு

இலங்கையில் சட்ட ஆட்சி, முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதனை ஒன்பது வயதுச் சிறுமியின் கொலைச் சம்பவம் கண் ஊடாகக் காட்டி நிற்பதாக வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அட்டுலுகமவைச் சேர்ந்த ஒன்பது வயதான சிறுமியின் மரணத்துக்கு நீதிகோரி வடக்குக் கிழக்கில் ஆர்ப்பாட்டங்களும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியம் வவுனியா புதியபேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நேற்று (31) முன்னெடுத்திருந்தது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

“இலங்கையின் வடக்கு, கிழக்கில் செயற்பட்டுவரும் பல்வேறு பெண்கள் அமைப்புக்களைச் சார்ந்த நாங்கள் இலங்கையில் வன்முறைக்கும் வன்கொடுமைக்கு உட்படுத்தப்படும் சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் நீதி கோரி இங்கு கூடியிருக்கிறோம். அண்மையில் இலங்கை அட்டுலுகமவை சார்ந்த ஒன்பது வயதுச் சிறுமி மனிதத்தன்மையற்று கொலை செய்யப்பட்ட சம்பவமானது அனைத்து மக்களையும், முழு நாட்டையும் சிறுமிகளையும் பெண்களையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கின்றது.

இவ்வாறான வன்முறைகளிலிருந்து பெண்களை காப்பாற்றுவது, பாதுகாப்பது சமூகத்தினதும் அரசினதும் கடமையாகும். இலங்கையில் சட்ட ஆட்சி, முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதனை சிறுமியின் கொலைச் சம்பவம் கண் ஊடாக காட்டி நிற்கின்றது. இலங்கையில் சட்டங்கள் இருந்தும் லஞ்சம் கொடுத்தல் மற்றும் பாரபட்சமான போக்கு என்பன குற்றவாளிகளை தப்பிக்க வைத்து பாதுகாக்கப்படும் நடைமுறை காணப்படுகின்றது. இதனால் குற்றங்கள் தொடர்ந்தும் இடம் பெற்றுக் கொண்டே இருக்கின்றது. குற்றவாளிகளும் தப்பித்துக் கொண்டே இருகின்றனர்.

சிறுமிகள் வன்கொடுமைகளுக்கும் மற்றும் பெண்கள் மீது இழைக்கப்படும் குற்றவாளிகளுக்கு, சார்பாக சட்டத்தரணிகள் ஆஜராகுவது குற்றவாளிகளை வலுப்படுத்துவதாகவே அமையும். அத்துடன் குற்றம் நிறைந்த ஒரு சமூகத்தினை மேலும் வலுவுள்ளதாக்கும். எனவே சட்டத்தரணிகள் நியாயத்தின் பக்கமே இணைய வேண்டும் எனக் கோருகின்றோம். மேலும் ஒன்பது வயதுச் சிறுமியின் கொடூரமான கொலையின் உண்மைத்தன்மை வெளிக்கொணரப்பட வேண்டும். இலங்கையில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு நடந்த வன்முறைகள் தொடர்பான பெரும்பாலான வழக்குகள் நீதி மன்றில் பல வருடங்களாக நிலுவையில் இருந்து வருகின்றன. எனவே நிலுவையில் உள்ள வழக்குகள் உடனடியாக விசாரிக்கப்பட்டு தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பாக குற்றம் நடந்து மூன்று மாத காலத்துக்குள் தீர்வு வழங்கும் வகையில் நீதி மன்ற நடவடிக்கைகள் அமைய வேண்டும். சிறுமிகளுக்கான விசேட நீதி மன்ற விசாரணை முறைமைகள் இலங்கையில் நடைமுறைக்கு வர வேண்டும் எனக் கோருகின்றோம். ஒன்பது வயதான சிறுமியின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதுடன், குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களையும், ஆறுதல்களையும் இந்நாளில் தெரிவித்துக் கொள்கின்றோம்” என்றனர்.

(வடக்கு, கிழக்கு மாகாண தமிழ்மிரர் நிருபர்கள்)

## மயாமான கல்முனை சிறுமி வாழைச்சேனையில் மீட்பு

ஏ.எல்.எம்.ஷினாஸ்

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள் சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்கியிருந்த நிலையில் காணாமல் போன 15 வயதுடைய சிறுமி வாழைச்சேனை, கல்குட வீதியில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு முன்பாக வீதியில் நின்றுகொண்டிருந்த போது, கல்முனை பொலிஸார் மீட்டுள்ளனர்.



கடந்த 29 ஆம் திகதி மதியம் 2.30 மணியளவில் காணாமல் போயிருந்த சிறுமி நேற்று முன்தினம் (30) மாலை மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் நண்பி ஒருவரின் துணையோடு பொலிஸார் முன்னெடுத்திருந்த விசாரணையிலேயே, 24 மணி நேரத்துக்குள் சிறுமியை கண்டுபிடித்து மீட்க முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பாதுகாப்பிற்காக குறித்த பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருந்த சிறுமியே காணாமல்போய் கண்டுப்பிடிக்கப்பட்டார்.

### வவுனியா கணேசபுரத்திலுள்ள

## சிறுமியின் சடலம் மீட்பு

க. அகரன்

வவுனியா கணேசபுரம் காட்டுப் பகுதியிலிருந்து 16 வயதுடைய சிறுமி ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை குறித்த சிறுமி காணாமல் போயிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து சிறுமியைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், சிறுமியின் வீட்டுக்கு அண்மித்த பாதை ஒன்றில் அவரது காலணி, புத்தகங்கள் கண்டெடுக்கப்பட்டன. குறித்த பகுதியில் தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டதுடன், அந்தப்பகுதியில் இருந்த கிணறு



ஒன்றில் இருந்து சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## சீனாவின் நிவாரணம் வழங்கி வைப்பு



எம்.எஸ்.எம்.நூர்தீன்

சீனாவின் யுனான் மாகாணத்தில் இருந்து இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வறுமையான 15 குடும்பங்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் புதிய காத்தான்குடி தெற்கு கிராம பல நோக்கு மண்டபத்தில் வைத்து நேற்று (31) வழங்கப்பட்டன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதரின் வழிகாட்டலில் காத்தான்குடி பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர் எம்.எம்.ஜரூப் இந்த நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார்.

## ஜெனரேட்டர் அன்பளிப்பு

எப்.முபாரக்

அல்ஜெஸீரா பெண்கள் அரபுக்கல்லூரிக்கு அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனினால் மின்பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) அன்பளிப்பு செய்யப்பட்டது.

அல்ஹித்மத்துல் உம்மா பௌபெண்டேசனின் தலைவரும் சமூகசேவையாளருமான கஸ்ஸாலி முகமட் பாத்திஹ் அல்ஜெஸீரா அரபுக்கல்லூரியின் தலைவரும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் அகில இலங்கை ஜம்இயதுல் உலமாவின் திருகோணமலை மாவட்ட தலைவருமான அஷ்ஷெய்ஹ் ஏ.ஆர். நஸார் அவர்களிடம் ஜெனரேட்டரை கையளித்தார்.




## அதிகாரத்தைப் பெறச் சண்டையிடும் யானைகள்

க. அகரன்

வவுனியா, மகாகச்சக்கொடிய கிராமத்துக்கருகில் இரண்டு காட்டு யானைகள் சண்டையிட்டு கொண்ட சம்பவம் கிராம மக்களை நெகிழ்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது.

வனவிலங்கு அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கையில், இரண்டு யானைகளும் தங்கள் பகுதியில் அதிகாரத்தை பெறுவதற்காகவே சண்டையிட்டு கொண்டதாகத் தெரிவித்தனர்.

இரண்டு யானைகளும் சுமார் இரண்டு நாட்களாக குறித்த பகுதியில் இருந்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தை பார்வையிட அதிகளவான மக்கள் அப்பகுதியில் குழுமியிருந்ததனை அவதானிக்க கூடியதாக இருந்தது.



### ஊடகவியலாளர் நடேசனுக்கு

## அஞ்சலி




க. அகரன்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது.

வவுனியா ஊடகஅமையத்தின் தலைவர் ப. கார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அன்னாரது திருவுருவ படத்திற்கு, மலர்தூவி, ஒளிதீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் தொடர்பான நினைவுப்பகிர்வுரையினை ஊடகவியலாளர் ந. ஜனகதீபன் நிகழ்த்தியிருந்தார்.

# பசறையில் 13 பேர் கைது

ராமு தனராஜா



பசறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (30) மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோய்ன் போதைப்பொருளுடன் மூவரும் போதை மாத்திரைகளுடன் மூவரும் நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நால்வரும், குடிபோதையுடன் அநாகரிகமான முறையில் நடந்துகொண்ட இருவரும் பொது இடத்தில் புகைப்பிடித்தவரும் என 13 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பசறை பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அத்தியட்சகர் திலிப் த சில்வாவின் ஆலோசனையின் பேரில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# விசேட செயலமர்வு

ஆ.ரமேஸ்

கரிட்டாஸ் கண்டி செட்டிக் நிறுவனம் ஊடகவியலாளர்களுக்கு விசேட செயலமர்வு இன்று (1) நுவரெலியாவில் நடத்தவுள்ளது.

"ஊடகவியலாளர்களுக்கிடையே பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை மற்றும் சமூகப்பிரச்சினைகள் தொடர்பாக தகவல் பகிர்வு நிகழ்வு" எனும் தொனிப்பொருளில் இந்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரிட்டாஸ் கண்டி செட்டிக் நிறுவனத்தின் பெருந்தோட்ட பிரிவு செயல் திட்டத்தினால் இந்த செயல் அமர்வு நடத்தப்படவுள்ளதுடன், நுவரெலியா- மறைக்கல்வி நடு நிலையத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 03 மணி வரை இச்செயலமர்வு இடம்பெறுமென இணைப்பாளர் சவரிமுத்து நிக்கலஸ் அறிவித்துள்ளார்.

## மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தில்

# மல்லாக்க மிதந்த பெண்ணின் சடலம் மீட்பு

எஸ்.கணேசன்



தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேல் கொத்மலை- நீர்தேகத்திலிருந்து நேற்று (31) காலை பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் தலவாக்கலை பொலிஸருக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலே மல்லாக்க கிடந்த சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட பெண் எவ்வாறு உயிரிழந்தார் அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. உருக்குலைந்த நிலையிலேயே சடலம் காணப்படுகின்றது எனவும் மேலதிக விசாரணைகளை தொடர்வதாகவும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# இறாக்கைகள் காலியாகின

ராஜபக்ஷ

ஹட்டனில் உள்ள சதொச விற்பனை கிளை நிறுவனத்தில் அத்தியாவசிய பொருள்கைள் கொள்வனவுக்காக நேற்றும் (31) அதிகளவானோர் வரிசைகளில் காத்திருந்தனர்.

குறித்த விற்பனை நிலையத்தில் வெள்ளை அரிசி ஒரு கிலோகிராம் 187 ரூபாய்க்கும் பொன்னி சம்பா 200 ரூபாய்க்கும் நாடு -190 ரூபாய்க்கும் வெள்ளைச் சீனி 235 ரூபாய்க்கும் மைசூர் பருப்பு 560 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

இதற்கமைய ஏனைய வர்த்தக நிலையங்களை விட ஓரளவு குறைந்த விலையில் அத்தியாவசிய பொருள்கள் விற்பனை செய்யப்படுவதால் பெருந்திரளானவர்கள் சதொச விற்பனை நிலையத்துக்கு வருகைத் தருவதாகவும் அதன் முகாமையாளர் தெரிவித்தார்.

எனவே அனைவருக்கும் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவே நுகர்வோருக்கு பொருள்கள் விநியோகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது ஹட்டன் சதொச கிளையின் பல பொருள்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இறாக்கைகள் காலியாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## மலையகத்திலும் சீரற்ற வானிலை:

# இயல்பு நிலை பாதித்தது

### அடை மழையில் குடைகளுடன் பல வரிசைகள் நீண்டன

மலையக நிருபர்கள்





மலையகத்தில் கடந்த சில வாரங்களாக மழையுடனான வானிலை நிலவி வந்தாலும் நேற்று முன்தினம் (30) இரவு தொடக்கம் நேற்றைய நாள் முழுவதும் கடும் மழையுடனான வானிலை நிலவியதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தோட்டங்களில் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் வருகை மழை மற்றும் கடும் குளிர், கடுங் காற்று காரணமாக குறைந்துள்ளன.

இதே வேளை நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகி வருவதனால் காசல்ரி, மவுசாகலை, கெனியோன், லக்ஷபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வதுடன், நிலைகளின் நீர் வரத்து அதிகரித்துள்ளது. அத்துடன், பனிமூட்டம் காணப்படுவதனால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக ஹட்டன் -கொழும்பு மற்றும் ஹட்டன் - நுவரெலியா உள்ளிட்ட பிரதான வீதிகளில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

பொகவந்தலாவை பிரதேசத்தின் கொட்டியாகல கீழ்ப்பிரிவில் உள்ள சில வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. கொட்டியாகல ஆறு பெருக்கெடுத்தன் காரணமாக சில இந்த வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்தது.

அதேபோல் பொகவந்தலாவை சென் மேரிஸ் தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையத்துக்கு அருகிலும் வெள்ளம் தேங்கியதால் பரீட்சார்த்திகள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக இரத்தினபுரி களுகங்கையின் நீர் மட்டம் தற்போது 5.82 மி.மீற்றர் வரை உயவடைந்துள்ளது.

தொடர்ந்து மழை பெய்யுமானால் களுகங்கையின் நீர் மட்டம் மேலும் உயர்வடைவதுடன் வெள்ள பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மழை காரணமாக பரீட்சைக்கு செல்லும் மணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக இரத்தினபுரி களுங்கையின் நீர் மட்டம் அதிகரித்து வருவதால் ஆற்றங் கரையோரங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறும் தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான- இறக்கவானை வீதியின் தெல்கொட பிரதேசமானது நீரில் மூழ்கியுள்ளது.

அங்கிருக்கும் மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். அப்பிரதேசத்தின் தாழ் நிலப்பகுதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கோனலகந்த, ஏலவெல்ல உள்ளிட்ட சில கிராமங்களுக்குச் செல்லும் பாலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இந்த பிரதேசத்தில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கலவான பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

# மண்ணெண்ணெய் வரிசை மழையிலும் குறையவில்லை

ரஞ்சித் ராஜபக்ஷ



மலையகத்தில் நேற்று முன்தினம் (30) இரவிலிருந்து கடுமையான மழை பெய்து வந்தாலும் ஹட்டன் நகரில் மழைக்கு மத்தியில் குடைகளை பிடித்துக்கொண்டு நுகர்வோர் மண்ணெண்ணெய் கொள்வனவுக்காக வரிசைகளில் காத்திருந்தனர்.

சில நாட்களாக ஹட்டன் நகரிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு மண்ணெண்ணெய் தொகை கிடைக்காமை காரணமாக, நுகர்வோர் தினமும் எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு வருகைத் தந்து வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

இதேவேளை ஹட்டன் நகரிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் என்பன கிடைத்துள்ளன.

# பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம்

எம். செல்வராஜா

பதுளை - ரொக்கில் அருள்மிகு ஸ்ரீ முருகன் தேவஸ்தான பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகம், எதிர்வரும் 13ஆம் திகதி (திங்களன்று முற்பகல் 11.53 மணி தொடக்கம் பகல் 12.30 மணிக்குள் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

இப்பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகத்தை முன்னிலைப்படுத்தி, எதிர்வரும் 11ஆம் திகதி ஆகம விதிப்படி கிரியைகள் ஆரம்பமாகும்.

12ஆம் திகதி யாகசாலை பிரவேசம், விஷேட திரவிய ஹோமம் உள்ளிட்ட கிரியைகளைத் தொடர்ந்து, பக்தர்கள் சந்தனக் காப்பு சாத்துதல் நிகழ்வும் மாலை 3 மணி வரை இடம்பெறும்.

13 ஆம் திகதி கணபதி பூஜை, வர்ண கும்பப் பூஜை, சண்முகார்ச்சனை, புஸ்பாஞ்சலி, நாதாஞ்சலி உள்ளிட்ட கிரியைகளைத் தொடர்ந்து, கலியுக வரதனான ஞான வேலாயுத சுவாமிக்கும், ஸ்ரீ வள்ளி, தேசேனா சமேத ஸ்ரீ முருகப் பெருமானுக்கும், ஸ்தாபிகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் இடம்பெற திருவருள் கூடியுள்ளது.

## குடையைப் பிடித்துக்கொண்டு

# கூப்பனுக்காக காத்திருந்தனர்

ரஞ்சித் ராஜபக்ஷ

நிலவும் சீரற்ற வானிலையையும் பொருட்படுத்தாது, சமையல் எரிவாயு கூப்பன்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையில் ஹட்டன் பிரதேச மக்கள் ஈடுபட்டனர்.

ஹட்டனில் இடம்பெறும் எரிவொயு சிலிண்டர் மோசடியைத் தவிர்ப்பதற்காகவும் எரிவாயு சிலிண்டர்களை உரிய முறையில் விநியோகிப்பதற்காக அம்பகமுவ பிரதேச சபையால் ஹட்டன்- டன்பார் மைதானத்தில் நுகர்வோரை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினம் (30) ஆரம்பிக்கப்பட்டு, நேற்றும் (31) தொடர்ச்சியாக அந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

ஹட்டன்- டிக்கோயா நகரசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நுகர்வோர், ஹோட்டல் , பேக்கரி உரிமையாளர்கள் என 1600 பேருக்கு எரிவாயு கூப்பன் நேற்று முன்தினம் (30) விநியோகிக்கப்பட்டது.

அதற்கமைய, நேற்றும் கூப்பன் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன் நோர்வூட் பிரதேசத்தில் இந்த கூப்பன் விநியோக செயற்பாடு இன்று (1) முன்னெடுக்கப்படும் என அம்பகமுவ பிரதேச செயலாளர் சிதாரா கமகே தெரிவித்துள்ளார்.



## இரத்தினபுரி மாவட்டத்துக்கும்

# தமிழக நிவாரணப் பொருள்கள் கிடைக்க வேண்டும்

சிவாணி ஸ்ரீ

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பொருட்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த நிவாரணப் பொருள்கள், இரத்தினபுரி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் மற்றும் கிராமப் புறங்களில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள்..

எனவே,மேற்படி பொருள்கள் பகிர்ந்தளிக்கும் விடயத்தில் பாகுபாடு இன்றி செயல்படுமாறு சம்பந்தபப்பட்டவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# உறவுகளைத் தேடியே மடியும் சர்வதேச சாட்சியங்கள்

அரசாங்கத்துக்கு எதிராக தென்னிலங்கை மக்கள் ஓரணியில் திரண்டு, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், போராட்டங்களை முன்னெடுக்கின்ற போதிலும், வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மழைச்சாரல் போல, இரண்டொரு போராட்டங்கள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன. குறிப்பிட்டு சொல்வதாயின், தென்னிலங்கை போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு முழுமையான ஆதரவு கரங்களை நீட்டவில்லை.

இந்நிலையில், தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருக்கும் தென்னிலங்கை தொழிற்சங்க வெகுஜன அமைப்பு ஒன்றியத்தின் பிரதிநிதிகள், தென்னிலங்கைப் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஆதரவு வழங்காமை தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர். அந்தளவுக்குத்தான் வடக்கு, கிழக்கு மக்களின் போராட்டங்களை தென்னிலங்கையைச் சேர்ந்த அமைப்புகளும் விளங்கி வைத்திருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் உரிமைப் போராட்டங்களை பல வழிகளிலும் நசுக்குவதற்கு முயன்ற போதெல்லாம் தென்னிலங்கையில் ஒரு சிலரைத் தவிர, கைகளைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்தவர்கள் அனேகர். ஆனால், தங்களுக்கு வலிக்கும் போதுதான் மருந்துகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

அவசரகாலச் சட்டம், பங்கரவாதத் தடைச் சட்டம் என்பன வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழர்களுக்கும், அவ்விரு மாகாணங்களுக்கு வெளியில் வாழும் தமிழர்களுக்கும் ஒன்றும் புதிதல்ல. ஆனால், அச்சட்டங்கள் எவ்வளவு ஆபத்தானவை என்பதை, பல தசாப்தங்களின் பின்னரே தென்னிலங்கை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

இவ்விரு சட்டங்களின் கீழும் கைதுசெய்யப்பட்டு, காணாமலாக்கப்பட்டவர்கள், இறுதி யுத்தத்தின் போது, தங்களுடைய கைகளால், படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடியலையும் உறவினர்களின் போராட்டம் சர்வதேசத்தின் பார்வைக்குச் சென்றிருக்கும் நிலையில், தென்னிலங்கைக்கு தென்படாமை வேதனையானது

காணாமலாக்கப்பட்ட உறவுக்களைத் தேடி, பல்வேறு வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதில், பங்கேற்றிருக்கும் உறவினர்களே சர்வதேசத்துக்கு ஒரே சாட்சியங்களாகும். அந்த சாட்சியங்களும் ஒவ்வொன்றாக மரணித்து வருகின்றன.

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்கள் அமைப்பைச் சேர்ந்தவர்களில் இதுவரையிலும் 320 பேர். வயது முதிர்ச்சி, நோய்வாய்பட்ட நிலையில் மரணித்துள்ளனர். இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் வயது முதிந்தவர்கள்.

யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருக்கும் தென்னிலங்கை தொழிற்சங்க வெகுஜன அமைப்புகள், காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டங்களையும் தென்னிலங்கை போராட்டங்களுடன் இணைப்பதற்கு வழிசமைக்க வேண்டும் அதனூடாக, இவ்விரு போராட்டங்களும் இன்னும் வலுப்பெறும். அதுவே அரசாங்கத்துக்கு பெரும் அழுத்தத்தை கொடுக்கும் .

வடக்கு, கிழக்கில் போராட்டங்கள் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்பட்டன. இனியும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது போராட்டங்களின் நியாயத்தன்மையை அறிந்து, ஆதரவுக் கரங்களை நீட்டியிருந்தாலே இன்னும் பல கோரிக்கைகளை வென்றெடுத்திருக்கலாம்.

பிரிந்திருப்பது ஆட்சியாளர்களுக்கு நன்மையை பயக்கும் என்பதை நினைவில் கொண்டு, உரிமைப் போராட்டங்களில் ஓரணியில் திரண்டிருப்பதே உத்தமம் என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

முத்தம் கூட சத்தமில்லாத காயத்தை ஏற்படுத்துமா!
உனது மூக்குத்தியின் அன்பான அழுத்தத்தைச் சொன்னேன். நன்று இன்று.

சத்தமில்லாமல் எனக்கே புரியாமல் எப்படி என்னைச் சுவீகரித்தாய்? அனல் நான் என அகங்காரம் கொண்டேன் புனல் நீயானாய்.

பஞ்சு கூட இரும்பை வென்று விடுகின்றது. காதலின் உச்சத்தில் காதலர் கோழைகள். களிப்புடன் நெஞ்சச் சிறைப்பட/ அடைப்பட விரும்புபவர்கள்.

பரந்த வனத்தையும் பூஞ்சோலை என எண்ணும் மயக்கம். எந்தக் காலமும் தமக்கெனக் கருதும் சிறகடிக்கும் பறவைகள். இதயத்து இறுக்கம் விலகுமா என்ன? பிரிய சகியே!

சொல்லத் தெரியாது. ஆனால் உதடுகள் அசைந்தால் கேட்பதோ பேசா மொழிகள்! விழிகள் எழுத இயம்பா கவிதைகள்.

சத்தம் போடாத காதல் சுத்தமாக இருக்கும். எத்திக்கும் இருந்தாலும் கைக்கு எட்டும் தூரத்தில் நீ.. நீ. மனதுக்குத் துயரம் ஏது? எல்லைகள் ஏது? அழகான காதல் ஆரோக்கியமானது.

பருத்தியூர் பாலவயிரவநாதன்

# பொறுப்புக் கூறலே இல்லாத நாடு



எம்.எஸ்.எம். ஐயூப்

சேய்ன்ட் கீட்ஸ் என்ற நாட்டைப் பற்றி இலங்கையில் எத்தனை பேருக்குத் தெரியும்? அதே போலவே இலங்கையைப் பற்றியும் உலகில் பல நாடுகளில் உள்ளவர்களுக்குத் தெரியாது. தெரிந்தவர்களிலும் பலர் இலங்கையில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போரின் காரணமாகவே அதைப் பற்றி அறிந்திருக்கலாம் அதேபோலவே மனித உரிமைகளைப் பற்றி அக்கறையுள்ளவர்கள் மனித உரிமை விடயத்தில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற தொடரந்து தவறியதன் காரணமாக இலங்கையைப் பற்றி அறிந்திருக்கலாம்.

மனித உரிமைகள் விடயத்தில் மட்டுமல்லாது, எந்தவொரு விடயத்திலும் பொறுப்புக் கூறல் என்பது இலங்கைக்கு அந்நியமானதாகவே இருக்கிறது. பொறுப்புறலை தட்டக் கழிப்பதானது இலங்கையின் கலாசாரத்தின் ஓர் அம்சம் என்று கூறும் அளவுக்கு அத்தன்மை அரச தலைவர்களினதும் அரசியல்வாதிகளினதும் உயர் அதிகாரிகளினதும் இரத்தத்திலேயே ஊறிப் போயுள்ளது.

எனவே, எந்த அட்டுழியத்தையும் செய்துவிட்டு, எவ்வித வெட்கமுமின்றி சமூகத்தில் தம்மை பெரும் தலைவர்களைப் போல் காட்டிக் கொள்வது சகஜமான விடயமாக உள்ளது.

நாடு இன்று பொருளாதார ரீதியில் அழிவை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டு இருக்கிறது. வெளிநாட்டுக் கடன் பெறாது அடுத்த வேளை சாப்பாட்டுக்கே வழியில்லாத நிலையில், ஏற்கெனவே பெற்ற கடனை செலுத்த முடியாது என்று இலங்கை பகிரங்கமாகவே அறிவித்துவிட்டது. இனி கடன் கொடுக்கப் போவது யார்? இலங்கையில் தமது அரசியல் பொருளாதார நலன்களை பாதுகாத்துக் கொள்ள முயலும் ஏதோ ஒரு சில நாடுகள் தொடர்நதும் மிகச் சிறிதாக கடன் வழங்க முன்வந்துள்ளதால் இன்று வரை காலத்தை கடத்த முடிந்துள்ளது.

கடந்த ஒரு வருட காலத்தில், ஏறத்தாழ சகல பொருட்களினது விலைகளும் மும்மடங்காக உயர்ந்துள்ளன. ஆனால், இந்தக் கால கட்டத்தில் மக்களின் வருமானம் இருந்ததைப் பார்க்கிலும் குறைந்துள்ளது. பசளைத் தட்டுப்பாட்டாலும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாகவும் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தனியார் துறையில் பல நிறுவனங்கள் கொரோனா பரவல் காரணமாக தமது வருமானம் குறைந்ததாகக் கூறி, தொழில் திணைக்களத்தின் அனுமதியுடனேயே தமது ஊழியர்களின் சம்பளத்தை குறைத்துள்ளன. சில நிறுவனங்கள் நிரந்தரமற்ற ஊழியர்களை நீக்கியுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில், பல நிறுவனங்களில் ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மத்தியதர வர்க்கத்தினர் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதால், அன்றாட கூலித் தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளனர். பொதுவாக வாடிக்கையாளர்களின் வருமானம் குறைந்துள்ளதால் சிறு வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமை, எதிர்வரும் வாரங்களில் மேலும் மோசமாகும் என்றே தெரிகிறது. ஜூன் மாத்துக்குப் பின்னர் நாட்டில் பெரும் உணவு நெருக்கடியொன்று ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் கூறியிருந்தார். ஏற்கெனவே அதன் அறிகுறிகளைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அந்நியச் செலாவணித் தட்டுப்பாடே இதற்கு உடனடிக் காரணமாகும். கையிருப்பில் இருக்கும் அல்லது அன்றாடம் கிடைக்கும் சிறு தொகை அந்நியச் செலாவணியையும் அன்றாட செலவுக்காகப் பயன்படுத்த வேண்டியதால் நாளுக்கு நாள் அந்நியச் செலாவணிக்கான கிராக்கி அதிகரித்துக் கொண்டே போகிறது. இதனால் நாளுக்கு நாள் இலங்கை ரூபாயின் பெறுமதி சர்வதேச சந்தையில் வேகமாகக் குறைந்து வருகிறது. அதன் விளைவாக இறக்குமதிப் பொருளான எரிபொருளின் விலையும் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே போகிறது.

எரிபொருளோடு உள்நாட்டில் சகல பொருட்களினது விலைகளும் துள்ளிக் குதித்து மேலே உயருகின்றன. இந்த நிலை எதிர்வரும் மாதங்களிலும் தொடரும். அதனால் தான், எதிர்வரும் மாதங்களில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று, நிபுணர்களும் எச்சரிக்கின்றனர்.

ஏன் இவ்வாறானதோர் நிலை ஏற்பட்டது? தொடர்ச்சியாக ஆட்சியாளர்கள் அடுத்த தலைமுறையை புறக்கணித்துவிட்டு அடுத்த தேர்தலைப் பற்றி சிந்தித்துச் செயற்பட்டனர். உள்நாட்டு விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திகளைப் புறக்கணித்து கடன் பெற்று நாட்டுக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முற்பட்டனர். சுருக்கமாக கூறின் இந்த நிலைமைக்கு அதுவே அடிப்படைக் காரணமாகும்.

கடந்த பல தசாப்தங்களாக வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் நிலை இருந்து வந்ததோடு அத்தொகையில் பெரும் பகுதி வெளிநாட்டு கடன் மூலமாகவே நிரப்பப்பட்டது. கடந்த காலத்தில் சகல அரசாங்கங்களும் உற்பத்திப் பொருளாதாரத்துக்குப் பதிலாக நலன்புரி பொருளாதாரத்தையே நடத்தி வந்துள்ளன. தற்போதைய அரசாங்கம், இந்த நிலையை சீர் செய்திருக்கலாம் அல்லது குறைந்தபட்சம் தற்போதைய நிலைமை இந்தளவுக்கு மோசமாவதைத் தடுத்திருக்கலாம். மாறாக, இந்த அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரம் அதள பாதாளத்துக்கே இழுத்துச் செல்லப்பட்டது.

முதலாவதாக, பொதுத் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு 2019 ஆம் ஆண்டு இறுதியில் பாரிய அளவில் வரிகள் குறைக்கப்பட்டன. அதன் மூலம் திறைசேரி வருடமொன்றக்கு 65,000 கோடி ரூபாயை இழந்தது. அத்தோடு கொரோனாவின் பாதிப்பால் அரச வருமானம் மேலும் குறைந்தது. இவற்றை ஈடுசெய்ய அரசாங்கம் மேலும் நாணயத் தாள்களை அச்சிட்டு வருகிறது. அறவிடப்படாத வரிப் பணமும் புதிதாக அச்சிடப்பட்டு செலவிடப்படும் பணமும் புழக்கத்துக்கு வருவதால் பண வீக்கம் ஏற்பட்டு பொருட்களின் விலை ஏறுகிறது.

இரண்டாவதாக, அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ஏற்பட்ட போது, அரசாங்கம் அதனை மக்களிடம் கூறாது இரசாயனப் பசளையின் காரணமாக சிறுநீரக நோய் ஏற்படுவதாகக் கூறி, அப்பசளை இறக்குமதியைத் தடைசெய்தது. அதற்குப் பதிலாக சேதனப் பசளையும் வழங்க முடியாத நிலையில், நாட்டில் பல பகுதிகளில் விவசாயம் முற்றாகவே அழிந்துவிட்டது. அதனால் பசளை மட்டுமன்றி, அரிசி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்ய நேர்ந்தது. அதாவது அந்நியச் செலாவணியை மீதப்படுத்த எடுக்கப்பட்ட தூரநோக்கற்ற நடவடிக்கையால் மேலும் கூடுதலாக அந்நியச் செலாவணியை செலவிட நேர்ந்தது.

மூன்றாவதாக, கொரோனாவின் தாக்கத்தால் ஏற்றுமதிகள் குறைந்து, சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டு வெளிநாட்டு கடன்களின் வருடாந்த தவணைத் தொகையை செலுத்த முடியாத நிலை ஏற்படும் என்பதை உணர்ந்த, தற்போதைய மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க போன்றோர், சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் நிதி உதவி பெறவும் வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைக்கவும் (குறைக்கவும் ஒத்திப் போடவும்) வேண்டும் என்று ஆலோசனை கூறினர்.

ஆனால், அவ்வாறு செய்யத் தேவையில்லை என, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர போன்றோர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கினர். அதன் விளைவாக இப்போது வெளிநாட்டுக் கடன் செலுத்த முடியாத நிலையும் அதனால் புதிதாகக் கடன் பெற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

நான்காவதாக, செலாவணித் தட்டுப்பாட்டின் விளைவாக டொலரின் பெறுமதி அதிகரித்துக் கொண்டு போகும் நிலையில் டொலருக்கு 203 ரூபாய்க்கு மேல் செலுத்துவதில்லை என கப்ராலின் தலைமையில் மத்திய வங்கி கடந்த வருடம் முடிவு செய்தது. ஆனால் வங்கித்துறைக்கு வெளியே டொலரின் விலை அதிகரித்துக் கொண்டே சென்றது. வங்கிகள் டொலருக்கு 203 ரூபாய் செலுத்தும் போது வெளிச் சந்தையில் டொலரின் விலை 260 ரூபாய் வரை அதிகரித்தது.

இந்த நிலையில், வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் வங்கிகள் ஊடாக இலங்கைக்கு வெளிநாட்டுப பணத்தை அனுப்புவதற்குப் பதிலாக வெளிச் சந்தை மூலமாக சட்ட விரோத முறைகள் மூலம் அப்பணத்தை அனுப்பலாயினர். இலங்கையில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டவர்களும் இலங்கைக்கு வெளிநாட்டுப் பணம் அனுப்புவதற்கு தயங்கினர். இதனால் கையிருப்பில் இருந்த பெருந்தொகையான அந்நியச் செலாவணியை இறக்குமதிகளுக்காகச் செலவிட நேர்ந்தது.

இவற்றில் சில விடயங்கள், கடந்த வாரம் நடைபெற்ற அரச நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற (கோப்) குழுவிலும் மத்திய வங்கி அதிகாரிகளால் எடுத்துரைக்கப்பட்டன. சர்வதேச நாணய நிதியத்திடம் உரிய நேரத்தில் செல்லாமையும் பசளை தடையும் தவறான நடவடிக்கைகள் என ஜனாதிபதியும் கடந்த மாதம் பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டார்.

ஆனால், நாட்டை இவ்வளவு பாரிய அழிவுக்குள் தள்ளியவர்கள் அதற்குப் பெறுப்பை ஏற்கத் தயாரில்லை. ஜனாதிபதியும் மேற்படி இரண்டு விடயங்கள் பிழையென ஏற்றுக் கொண்டாலும் அதனால் கஷ்டப்படும் மக்களிடம் மன்னிப்புக் கேட்கவில்லை. இவ்வளவு பாரிய அழிவை ஏற்படுத்திய அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தண்டிக்கப்பட வேண்டாமா? ஒரு நிறுவனத்துக்கு அதன் இருப்பே அபாயத்துக்கு உள்ளாகும் வகையிலான நட்டத்தை ஓர் ஊழியர் ஏற்படுத்தினால், அவர் பதவி நீக்கப்படுவதோடு நட்டத்தையும் அவரிடம் அறவிட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும். ஆனால், இந்த அழிவை ஏற்படுத்திய ஜனாதிபதி இவ்வளவு பாரிய மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றும் பதவி விலகத் தயாரில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அமைச்சர்களும் குறைந்த பட்சம் விசாரணைக்காவது உள்ளாக்கப்படாமல் சுதந்திரமாக இருக்கிறார்கள்.

அண்மைக்காலத்தில், சீனி மோசடியால் அரசாங்கம் 9,000 கோடி ரூபாயை இழந்தது. பல வர்த்தகர்கள், அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய 5400 கோடி ரூபாயைச் செலுதாமல் இருப்பதாக அண்மையில் தெரிய வந்தது. ஆனால், இவற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. ஏனெனில், அவர்கள் அரசியல்வாதிகளின் நண்பர்களான பெரிய புள்ளிகள். பொறுப்புக் கூறல் இல்லாத நாடு, எவ்வாறு அபிவிருத்தி அடைய முடியும்?

## கடிதங்கள்

### தாங்கிக்கொள்ள முடியவில்லை

**நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மருந்தகங்கள் மற்றும் அங்காடிகளில் இருக்கும் மருந்தகங்களில் மருந்து பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது.**

மருந்துகளின் விலை அதிகரிப்பை பொதுமக்களால் தாங்கிக்கொள்ள முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. இதனால், ஓய்வு பெற்றவர்கள் உள்ளிட்ட நோய்வாய் பட்டவர்கள் கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர்.

அத்தியாவசியமான மருந்து பொருட்களின் விலைகள் நாடளாவிய ரீதியில் அதிகரித்துள்ளன. சாதாரண மருந்துகளுக்கும் குளிசைகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றனர் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மருந்தகங்கள் மற்றும் அங்காடிகளில் இருக்கும் மருந்தகங்களில் மருந்து பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது. சில நோய்களுக்கு வைத்தியசாலைகளில் கூட மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பினால் கடுமையான பிரச்சினைகளுக்கு தாங்கள் முகங்கொடுத்துள்ளோம் எனத் தெரிவித்துள்ள ஓய்வுபெற்றோர், தங்களுக்கு கிடைக்கும் ஒருசிறு தொகை ஓய்வூதியத்தை வைத்துக்கொண்டு அன்றாடம் ஜீவியம் நடத்த முடியாமல் இருக்கிறது. இதனிடையே, மருந்துப் பொருட்கள் மற்றும் குளிசைகளின் தட்டுப்பாடு, விலையேற்றத்தால் பாரிய அசௌகரியங்களுக்கு தாமும் முகங்கொடுத்துள்ளதாக ஓய்வு பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மஹேஸ் கீர்த்திரத்ன



# அமைச்சரவைத் தீர்மானங்களில் சில

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று முன்தினம் (30) கூடிய வாராந்த அமைச்சரவை சந்திப்பின் போது, எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### ஆரம்ப ஒப்பந்தம்

உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையாக தோன்றியுள்ள எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியா போன்ற தொற்றல்லா நோய்கள் மூன்றையும் ஒழிக்கும் நோக்கில் 2002 ஆம் ஆண்டில் 'எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவுடன் போராடுவதற்கான உலக நிதியம்' ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு தொடக்கம் அந்நிதியத்தின் மூலம் இலங்கைக்கு 114 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக 24 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் சுகாதார அமைச்சு 88.3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான 15 ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. அவற்றில் 2021 ஒக்ரோபர் 31 ஆம் திகதியாகும் போது 71 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கல்களை பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக நிதியம் 2022  2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக மேலும் 9.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, குறித்த வழங்கலை பெற்றுக் கொள்வதற்காக அவ் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### சேவையில் அமர்த்துதல்

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான Mv.Ceylon Breeze மற்றும் Mv.Ceylon Princess ஆகிய இரண்டு கப்பல்களையும் 2022 தென்மேல் பருவக்காற்றுக் காலத்தில் சர்வதேச வாடகை சந்தையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கான விருப்பக் கோரல் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த இரண்டு கப்பல்களையும் வணிக முகாமைத்துவப் பொறிமுறையின் கீழ் குறித்த காலப்பகுதியில் சேவையில் அமர்த்துவதற்கான ஒப்பந்தத்தை சிங்கப்பூரின் M/s Wallem Shipping Pre Ltd. இற்கு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### கொடுப்பனவுகளைச் செலுத்தல்

நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையால் வெளிநாட்டு செலாவணிகளில் ஏற்படுகின்ற திடீர் அதிகரிப்புக்களுக்கமைய கடன்பத்திரங்களை திறந்துள்ள மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களை வெளிப்புறப்படுத்துவதற்கு சுங்க ஒப்புதல் வழங்கும் தினத்தில் நிலவுகின்ற செலாவணி விகிதத்திற்கமைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக 2022 ஏப்ரல் மாதம் 25 அம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆய்வுகூட உபகரணங்கள், நுகர்வுப் பொருட்கள் மற்றும் தாக்குப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக கடன்பத்திரங்களைத் திறந்துள்ள விநியோகத்தர்களுக்கு குறித்த பொறிமுறையைப் பின்பற்றி கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும், தற்போது அரச மருந்துகள் கூட்டுத்தாபனத்தால் விலைமனுக் கோரப்பட்டு விலைமுறிகள் திறக்கப்பட்டுள்ள பெறுகைகள் உள்ளடங்கலாக, ஏனைய ஏற்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற தினத்தில் நிலவுகின்ற செலாவணி விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு செலுத்தல்களை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### திருத்தம் செய்தல்

தொழிலாளர் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் கைத்தொழில் பிணக்குகள் சட்டம் போன்றவற்றின் கீழ் வழங்கப்படுகின்ற இசைவுத் தீர்ப்புக்கள் மற்றும் தீர்ப்புக்களுக்கு எதிராக மேன்முறையீடுகள், மீளாய்வு மற்றும் எழுத்தாணை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது பிணைப்பொறுப்புத் தொகையொன்றை வைப்புச் செய்யக்கூடிய வகையில் குறித்த சட்டங்களைத் திருத்தம் செய்வதற்காக 2021 மார்ச் மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### அங்கிகாரத்திற்காக சமர்ப்பித்தல்

சட்டபூர்வமற்ற வெளிநாட்டு நாணய வணிக நடவடிக்கைகள் அதிகரிப்பதைத் தடுப்பதற்காகவும் மற்றும் சரக்குகள் சுங்க விடுவிப்பின் போதான இறக்குமதிக்கான குறைந்த செலவுச்சிட்டையை சமர்ப்பிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கிலும், இலங்கை மத்திய வங்கியின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒருசில கொடுப்பனவு முறைகளுக்கு மட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

திறந்த கணக்கு கொடுப்பனவு முறை, சரக்கு விற்பனையின் பின்னர் பணம் கொடுப்பனவு முறை, கொடுப்பனவின் பின் ஆவணச் செலுத்தல் முறை, ஏற்றுக்கொள்ளலின் அடிப்படையில் ஆவணச் செலுத்தல் முறை ஆகியவற்றை மட்டுப்படுத்தக் கூடிய வகையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அத்தகைய ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதகாலத்தில் அமைச்சரவை அங்கிகாரத்துடன் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிக்க அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### GDP கணிப்பிடல்

பொருளாதாரத்தின் உண்மையான கட்டமைப்பை சரியான வகையில் அடையாளங் காணல், பொருளாதார வளர்ச்சி வேகம் தொடர்பான பெறுமதிகளை சரியான வகையில் மதிப்பீடு செய்தல், தேசிய கணக்குகள் தொடர்பாக ஏற்புடைய சர்வதேச நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய பரிந்துரைகள் மற்றும் பொறிமுறைகளைக் கையாளல் போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய கணக்குகள் மதிப்பீடு செய்யும் அடிப்படை ஆண்டு இற்றைப்படுத்தப்படும். அதற்கமைய, தேசிய கணக்குகளைத் தயாரிக்கும் போது தற்போது அடிப்படையாகக் கொண்டுள்ள 2010 ஆண்டுக்குப் பதிலாக அடிப்படை ஆண்டாக 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலாண்டு மற்றும் ஆண்டுக்கான கணக்கு மதிப்பீடுகளைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கைகளை வெளியிட்டு, 2022 முதலாம் காலாண்டு தொடக்கம் தொடர்ந்து வரும் காலங்களில் 2015 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்ட தேசிய கணக்கு மதிப்பீடுகளை வெளியிடுவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

சென்னை

# புகையிலையை ஒழிக்கவேண்டும்



புகையிலை பயன்பாட்டையே முற்றிலுமாக ஒழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது, அதற்குத் தேவையான கடுமையான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் (பா.ம.க) தலைவர் அன்பமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

"இன்று (மே.31) WorldNoTobaccoDay. "புகையிலை நமது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல்" (Tobacco: Threat to our environment) என்பதை இந்நாளின் நோக்கமாக WHO அறிவித்துள்ளது. உடல்நலக் கேடு மட்டுமின்றி விவசாயம்,தயாரிப்பு, விநியோகம், குப்பை என அனைத்திலுமே புகையிலை பெரும்பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

உலக புகையிலை எதிர்ப்பு நாள் கடைபிடிக்கப்படும் நிலையில், புகையிலையால் மனித குலத்திற்கு ஏற்படும் தீமைகள் குறித்து அறிந்து கொள்ளவும், புகையிலை பயன்பாட்டை முழுமையாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அனைத்துத் தரப்பு மக்களும் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

புதுடெல்லி

# சுகாதார அமைச்சர் அதிரடியாக கைது

புதுடெல்லி சுகாதார அமைச்சரும் ஆம் ஆத்மி மூத்த தலைவருமான சத்யேந்திர ஜெயின், பணப்பரிமாற்ற மோசடி வழக்கில் அமுலாக்கத் துறையினர் கைது செய்தனர்.

புதுடெல்லியில், முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் ஆம் ஆத்மி ஆட்சி நடக்கிறது. ஹிமாச்சல பிரதேசத்தில் இந்த ஆண்டு இறுதியில் நடக்கவுள்ள சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியைப் பிடிக்க ஆம் ஆத்மி திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், இக்கட்சியின் மூத்த தலைவரும், புதுடெல்லி சுகாதாரத்துறை அமைச்சருமான 57 வயதான சத்யேந்திர ஜெயின் ஹிமாச்சல பிரதேச பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



எனினும், அவர் மீது ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு இருந்த பணப்பரிமாற்ற மோசடி வழக்கில், அமுலாக்கத்துறையினர் நேற்று முன்தினம் (30) கைது செய்தனர்.

---



கொல்கத்தா

# இறந்த குட்டியுடன் அலைந்த யானை


மேற்குவங்கத்தின் ஜல்பைகுரி தேயிலை தோட்ட பகுதிக்கு தாய் யானை ஒன்று, உயிரிழந்த குட்டியை தும்பிக்கையில் சுமந்தபடி வெள்ளிக்கிழமை 927) வந்தது. அந்த தாய் யானையை சுமார் 30 காட்டு யானைகள் பின்தொடர்ந்தன.

கண்களில் நீர்வழிந்தபடி உயிரிழந்த குட்டியை தும்பிக்கையில் தூக்கிக் கொண்டு ஒவ்வொரு தேயிலை தோட்டமாக தாய் யானை சுற்றித் திரிந்தது. கடந்த இரு நாட்களாக சுமார் 7 கிலோமீற்றர் தொலைவுக்கு அங்கும், இங்கும் பிளிறியபடி ஓடியது.

மாநில வனத் துறையினர் சம்பவ இடத்துக்கு வந்து தாயிடம் இருந்து உயிரிழந்த குட்டியை பிரிக்க முயற்சி செய்தனர். ஆனால் தாய் யானை, குட்டியை விட்டு விலக மறுத்துவிட்டது. அதோடு 30 யானைகளும் சுற்றித் திரிந்ததால் வனத்துறை அலுவலர்களால் உயிரிழந்த குட்டியை மீட்க முடியவில்லை. இரு நாட்களாக தேயிலை தோட்டங்களில் குட்டியை தூக்கியபடி சுற்றித் திரிந்த தாய் யானை காட்டுக்குள் சென்றது.

வனத்துறை அதிகாரிகள் கூறும் போது, "மனிதர்களை போன்று யானைகளும் தங்கள் குட்டிகள் மீது அதிகம் பாசம் கொண்டிருக்கின்றன. குட்டி யானை எப்படி உயிரிழந்தது என்பது தெரியவில்லை. ஆனால் தாய் யானையின் தவிப்பு எங்களை கண்ணீர்மல்க செய்துவிட்டது" என்றனர்.

---



திண்டுக்கல்

# 21 ஆவது நாய்கள் கண்காட்சி

கொடைக்கானலில் கோடை விழாவின் முக்கிய பங்காக கால்நடை மற்றும் பராமரிப்பு துறை சார்பாக நாய் கண்காட்சி நடைபெற்றது.

21 ஆவது ஆண்டு நடைபெற்ற, இந்த நாய் கண்காட்சியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து நாய்கள் பங்கேற்றன. குறிப்பாக சிட்சு, ஜெர்மன் ஷெப்பர்ட், போமெரியன், ராஜபாளையம், சிப்பிபாறை, பிக்புல் உள்ளிட்ட ரக நாய்கள் உள்பட மொத்தம் 54 நாய்கள் கண்காட்சியில் கலந்துகொண்டன. அப்போது நாய்கள் அன்னநடை போட்டும், பாய்ந்து ஓடியும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்தன.

---

ஹைதராபாத்:

# குடும்ப ஆட்சி கேடு விளைவிக்கும்

"குடும்ப அரசியல் மாநிலங்களுக்கு மட்டுமல்லாது, நாட்டிற்கும் கேடு விளைவிக்கும்" என ஹைதராபாத்தில் பிரதமர் நரேந்திர மோடி கடுமையாகப் பேசினார்.

ஹைதராபாத் பேகம்பேட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு ஏற்பாடு செய்திருந்த கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி, ''தெலங்கானா மக்களுக்கு நமஸ்காரம்'' என தெலுங்கு வணக்கம் தெரிவித்து தனது உரையை தொடங்கினார்.

அவர் மேலும் பேசியது: ''உங்கள் அபிமானமே என்னுடைய பலம். நம்பிக்கை, வீரத்திற்கு மாற்றுப்பெயர் தெலங்கானா மக்கள்.



அவர்களுக்கு என்னுடைய மரியாதைக்குரிய வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். தெலங்கானாவை தொழில்நுட்ப மாநிலமாக மாற்றுவோம். தெலங்கானாவின் வளர்ச்சி இளைஞர் கையில்தான் உள்ளது. ஆனால் ஒரு குடும்பத்திற்காக தெலங்கானா போராட்டம் நடைபெறவில்லை. குடும்ப அரசியல் மாநிலங்களுக்கு மட்டுமல்லாது, நாட்டிற்கும் கேடு விளைவிக்கும் என்றார்.

---

புதுடெல்லி

# மோடியின் மவுசு கூடியது

கொரோனா தொற்றுக்குப் பிறகு பிரதமர் மோடியின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

'லோக்கல் சர்க்கிள்ஸ்' என்ற அமைப்பு சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் செயல்பாடுகளை வைத்து ஆய்வு நடத்தியது.

பிரதமர் மோடி தலைமையிலான அரசு, பல்வேறு திட்டங்களை அமல்படுத்தும் விதம் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது விலைவாசி உயர்ந்து வந்த நிலையிலும், வேலைவாய்ப்பு பிரச்சினை நிலவினாலும் நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதில் மோடி அரசு சிறப்பாக செயல்படுகிறது என்று பெரும்பாலானோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்றுக்குப் பிறகு மோடியின் செல்வாக்கு எதிர்பார்த்த அளவு அல்லது அதற்கு மேலாக அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.



ஈராக்

மூக்கில் இருந்து குருதி வடிதல்

# மரண காய்ச்சலுக்கான அபாய வைரஸ்



ஈராக்கில் கால்நடைகளின் மேலிருக்கும் உண்ணிகள் மூலமாக மனிதர்களுக்கு புதியதொரு வைரஸ் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவோருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்படுவதோடு மூக்கில் இருந்து இரத்தம் வடிவதாகவும், இந்நிலை தொடருமானால் உயிரிழப்பு ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வித உண்ணி தாக்குதலுக்குள்ளான ஆடு, மாடு போன்ற விலங்குகளோடு அதிகமாகத் தொடர்பு கொண்டவர்களுக்கு இந்த காய்ச்சல் எளிதில் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது 33 வயதிற்கு குறைவானவர்களுக்கு இந்த பாதிப்பு அதிகம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இக் காய்ச்சலுக்கு தற்போது வரை தடுப்பூசி கண்டுபிடிக்க முடியவில்லை என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஈராக்கில் இவ்வாண்டில் இதுவரை, 111 பேருக்கு இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா

கைத்துப்பாக்கி வைத்திருக்கும்

# உரிமை முடக்கம்

கனடாவில் கைத்துப்பாக்கி வைத்திருக்கும் உரிமை முடக்கம் செய்யவுள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அண்மையில் உவால்டே நகரில் பாடசாலை ஒன்றில் 18 வயது நபர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 19 சிறுவர்கள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர். இத் துப்பாக்கிச் சூடு சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது..



இந்நிலையில், கனடாவில் கைத்துப்பாக்கி உரிமையை முடக்குவதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார்.

இவ் அறிவிப்பு சட்டமாகிவிட்டால், கனடாவில் எங்கும் கைத்துப்பாக்கிகளை வாங்கவோ, விற்கவோ, மாற்றவோ முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளம்



# விமான விபத்தில் 21 பேரின் உடல்கள் மீட்பு


நேபாளத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் உயிர் இழந்தோரில், 21 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தில், கடந்த 28 ஆம் திகதி, பொகாரா நகரில் இருந்து, இந்தியர்கள் நான்கு பேர் உட்பட, 22 பேருடன் சுற்றுலா தலமான, ஜாம்சம் நோக்கி தாரா எயார்வேஸ் நிறுவனத்தின் விமானம் புறப்பட்டது.

எனினும் புறப்பட்ட சில நிமிடங்களில் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துடனான விமானத்தின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

இதையடுத்து விமானத்தை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

அப்போது அந்த விமானம் மஸ்தாங் மாவட்ட மலை முகட்டில் மோதி விபத்துக்குள்ளானது தெரியவந்தது. விமானம் பள்ளத்தில் சிதறிக் கிடந்த நிலையில் அதில் இருந்த அனைவரும் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையே மீட்பு படை வீரர்கள், 21 பேரின் உடல்களை மீட்டுள்ளனர் எனவும் ஒருவரின் உடலைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சீனா

சிறுவருக்கானப் பாடசாலை புத்தகத்தில்

# ஆபாச ஓவியங்கள்

சீனாவில் சிறுவர்களுக்கான பாடசாலைப் புத்தகத்தில் ஆபாச ஓவியங்கள் அச்சிடப்பட்டு ள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக அப் புத்தகத்தில் சிறுவர்களும் சிறுமிகளும் ஆபாசமாக இருக்கும் வகையிலான ஓவியங்களும் அமெரிக்க நாட்டின் கொடியை உடையாக அணிந்தவாறு இருக்கும் ஓவியங்களும் அச்சிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. .


இந்நிலையில் பாடப்புத்தகங்களை வெளியிடுவதற்கு முன்பாக சரியாக படித்து ஆய்வு செய்யாமல் வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாடசாலை புத்தகங்களை ஆய்வு செய்யுமாறு நாட்டின் கல்வி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. மேலும், இது தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ரஷ்யா

இராணுவ ஆட்சேர்ப்பில்

# வயது வரம்பு நீடிப்பு



ரஷ்யாவில், 40 வயதிற்கு மேற்பட்டோரையும் இராணுவத்தில் சேர்ப்பதற்கு அனுமதிக்கும் தீர்மானத்திற்கு அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஒப்புதல் அளித்துள்ளார்.

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியில் இருந்து போர் இடம்பெற்று வருகின்றது.

இப்போரில் ரஷ்ய வீரர்கள் 30,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரேன்அரசு தெரிவித்துள்ளது.

இதுவரை 18 வயது முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்களே ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது உச்சக்கட்ட வயது வரம்பு நீக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மருத்துவர்கள், பொறியாளர்கள், தகவல் தொடர்பு நிபுணர்கள் என ஏராளமான தொழில்நுட்ப வல்லுனர்களை இராணுவத்தில் சேர்க்க ரஷ்ய அரசு திட்டமிட்டுள்ளது.

உக்ரேன்

# உக்ரேனுடன் கைக் கோர்க்கும் ஐரோப்பிய ஒன்றியம்

ரஷ்யாவின் தாக்குதல்களால் சீர்குலைந்த உக்ரேனின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் உடனடி நிதியாக 9 பில்லியன் யூரோவை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல் அளித்துள்ளது.

அண்மையில் பெல்ஜியத்தின் தலைநகர் புருசெல்ஸ்சில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரெஞ்சுப் பகிரங்க டெனிஸ் தொடர்:

# வெளியேற்றப்பட்ட மெட்வடெவ், சிட்டிபாஸ்



பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, உலகின் இரண்டாம் நிலை வீரரான டேனியல் மெட்வெடெவ், நான்காம் நிலை வீரரான ஸ்டெபனோஸ் சிட்டிபாஸ் ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.


நேற்று அதிகாலை நடைபெற்ற குரோஷியாவின் மரின் சிலிச்சுடனான நான்காவது சுற்றுப் போட்டியில் 2-6, 3-6, 2-6 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் மெட்வெடெவ் தோல்வியடைந்திருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்ற டென்மார்க்கின் ஹொலகர் ரூனுடனான நான்காவது சுற்றுப் போட்டியில் 5-7, 6-3, 3-6, 4-6 என்ற செட் கணக்கில் கிரேக்கத்தின் சிட்டிபாஸ் தோல்வியடைந்திருந்தார்.

அம்பாறை பாடசாலைகள் கிரிக்கெட் அணியில்


# கல்முனை சாஹிரா கல்லூரி மாணவர் நால்வர்










அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம், நாடு தளுவிய ரீதியில் மாவட்டங்களுக்கிடையில், பாடசாலைகளுக்கிடையில் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் தொடரொன்றை நடாத்தி வருகின்றது.

இத்தொடருக்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து மாணவர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதில், கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரியைச் சேர்ந்த அப்துல்லாஹ் அத்பி, அஸ்மத் ஸஹி, முஹம்மட் ஸஹீம், பர்ஹத் பறாஸ் ஆகிய நான்கு மாணவர்கள் அம்பாறை மாவட்ட அணியில் இடம்பிடித்துள்ளனர்.



டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைமைத்துவம்:

# மொமினுல்லை தீர்மானமெடுக்குமாறு கோரிய கிரிக்கெட் சபை

பங்களாதேஷின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் பதவியானது அவரது துடுப்பாட்டத்தைப் பாதிப்பதைக் கருத்திற் கொண்டு அணித்தலைவர் பதவியில் தொடர வேண்டுமா அல்லது இல்லையா என்பது குறித்து பங்களாதேஷின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவர் மொமினுல் ஹக்கை முடிவெடுக்குமாறு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

கடந்த 15 டெஸ்ட் போட்டி இனிங்ஸ்களில் 12.57 என்ற சராசரியில் 176 ஓட்டங்களை மாத்திரமே ஹக் பெற்றுள்ளதோடு, அணித்தலைவராக 17 டெஸ்ட் போட்டிகளில் 31.44 என்ற சராசரியில் 912 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

ஹக்கின் தலைமையின் கீழ் 17 போட்டிகளில் 12 போட்டிகளில் தோற்ற பங்களாதேஷ், இரண்டு போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்ததோடு, மூன்று போட்டிகளில் வென்றிருந்தது.

# பரிஸ் ஸா ஜெர்மைனில் தொடர எதிர்பார்க்கும் நெய்மர்



அடுத்த பருவகாலத்திலும் பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனில் தொடர எதிர்பார்ப்பதாக அக்கழகத்தின் முன்களவீரரான நெய்மர் தெரிவித்துள்ளார்.

தற்போது 30 வயதான நெய்மரை வேறு கழகங்களுக்கு விற்க பரிஸ் ஸா ஜெர்மைன் தயாராகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், நெய்மரின் வருடாந்த ஊதியமானது ஆண்டுக்கு 35 மில்லியன் யூரோக்களாக இருக்கின்ற நிலையில், அவரை ஒப்பந்தம் செய்ய விரும்பும் கழகங்களுக்கு இது சிக்கலாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

பரிஸ் ஸா ஜெர்மைனுடன் இன்னும் மூன்று ஆண்டுகள் ஒப்பந்தத்தை நெய்மர் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# 'பயேர்ண் மியூனிச்சுடனான கதை முடிந்து விட்டது'

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சுடனான கதை முடிந்து விட்டதென நேற்று முன்தினம் தெரிவித்துள்ள அக்கழகத்தின் முன்களவீரரான றொபேர்ட் லெவன்டோஸ்கி, அக்கழகத்தில் இருப்பதை தன்னால் கனவு காண முடியாதெனக் கூறியுள்ளார்.

ஒன்று நிச்சயமாகியுள்ளதெனவும், பயேர்ணுடனான தனது கதை முடிந்து விட்டதென்றும், அண்மைய மாதங்களில் நடைபெற்ற அனைத்தையுமடுத்து, தான் மேலும் நல்ல ஒத்துழைப்பை நினைக்கவில்லையென்றும் போலந்து தேசிய அணிக்கான கடமையில் இருக்கும்போது செய்தியாளர் மாநாடொன்றில் 33 வயதான லெவன்டோஸ்கி தெரிவித்துள்ளார்.

இரண்டு தரப்புக்கும் சிறந்த தீர்வாக வீரர் பரிமாற்றமொன்று இருக்கும் என தான் உணர்வதாக லெவன்டோஸ்கி கூறியுள்ளார்.

அடுத்தாண்டு வரையில் மியூனிச்சுடன் லெவன்டோஸ்கி ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மியூனிச்சுக்காக 375 போட்டிகளில் விளையாடி 344 கோல்களை லெவன்டோஸ்கி பெற்றுள்ளார். கடந்த பருவகாலத்தில் 46 போட்டிகளில் 50 கோல்களை மியூனிச்சுக்காக லெவன்டோஸ்கி பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 01 ஜூன் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.